டிஜிட்டல் டெய்லி
அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 26.03.2026 வியாழக்கிழமை | பக்கங்கள் 27 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 229 - Madurai | Online Edition

# சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவிற்கான காலக்கெடுவில் எவ்வித மாற்றமும் இல்லை

## பெட்ரோலிய அமைச்சகம் தகவல்



புது தில்லி, மார்ச் 25

சமையல் எரிவாயு சிலிண்டர் முன்பதிவிற்கான காலக்கெடு மாற்றியமைக்கப்பட்டுள்ளதாக சில செய்தி அறிக்கைகளும், சமூக ஊடகப் பதிவுகளும் வெளியாகியுள்ளதாக மத்திய அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. அதன்படி, பிரதமரின் உஜ்வாலா திட்டத்தின் கீழ், சமையல் எரிவாயு சிலிண்டர் இணைப்புகளுக்கு 45 நாட்கள், ஒற்றை சிலிண்டர் இணைப்புகளுக்கு 25 நாட்கள் மற்றும் இரட்டை சிலிண்டர் இணைப்புகளுக்கு 35 நாட்கள் என முன்பதிவு செய்வதற்கான புதிய காலக்கெடு நிர்ணயிக்கப்பட்டு உள்ளதாக அந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

ஆனால், அத்தகைய காலக்கெடு எதுவும் விதிக்கப்படவில்லை என்று இதன் மூலம் மத்திய அரசு தெளிவுபடுத்துகிறது. தற்போது நடைமுறையில் உள்ள சிலிண்டருக்கான முன்பதிவு செய்வதற்கான காலக்கெடுவில் எவ்வித மாற்றமும் இல்லை என்றும், அவை, நகர்ப்புறங்களில் 25 நாட்கள் என்றும், கிராமப் புறங்களில் 45 நாட்கள் என்றும் (இணைப்பு வகை எதுவாக இருப்பினும்) ஏற்கனவே இருக்கும் நடைமுறை தொடர்வதாகவும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய தவறான செய்திகளை நம்பவோ அல்லது பரப்பவோ வேண்டாம் என்றும், சமையல் எரிவாயு சிலிண்டரை தேவையற்ற அல்லது பதற்றத்தின் காரணமாக முன்பதிவு செய்வதைத் தவிர்க்குமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

# கோடைப் பருவமும் காய்கறி பயிர் சாகுபடியும்

ஒவ்வோரு பருவக்காலத்திற்கும் ஏற்ப பயிர்களை பயிர் செய்வதால் நாம் அதிக விளைச்சலை பெற முடியும். தற்போது கோடை காலம் துவங்கியுள்ளது. எனவே நாம் கோடையில் அதிக மகசூல் தரும் ரகங்களை தேர்ந்தெடுத்து பயிர் செய்வது அவசியம். இந்த கோடை பருவத்தில் பயிரிட கத்தரி மற்றும் வெண்டை ஆகியவை உகந்த காய்கறிகள் ஆகும்.

கத்திரியில் பலவித நாட்டு ரகங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு ரகமும் ஒவ்வொரு அளவில் மகசூல் கொடுக்கக் கூடியவை. அவற்றைவிட அதிக மகசூல் கொடுக்கக்கூடிய வீரிய ரகங்களும் அதிகம் உள்ளன. ஒரு ஹெக்டர் பரப்பில் விதைக்க நாட்டு ரகங்களில் 400 கிராம் விதை தேவை. வீரிய ரகங்களில் 200 கிராம் விதை போதுமானது. எந்த ரக விதையாக இருந்தாலும் அதை விதை நேர்த்தி செய்ய வேண்டியது அவசியம். அதனால், முளைப்புத்திறன் அதிகரிப்பதோடு சில நோய்களும் தடுக்கப் படும்.




agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

விதை நேர்த்தி என்பது 40 கிராம் அசோஸ்பைரில்லத்தை தேவையான அளவு அரிசி வடி கஞ்சியில் கலந்து, அதில் ஒரு ஹெக்டர் பரப்புக்குத் தேவையான விதையை மூழ்க வைத்து எடுத்து நிழலில் இரண்டு மணி நேரம் உலர வைக்க வேண்டும்.

பிறகு, ஒரு கிலோ விதைக்கு 4 கிராம் என்ற அளவில் டிரைக்கோடர்மா விரிடி அல்லது ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் சூடோமோனாஸ் என்ற அளவில் எடுத்துக் கொண்டு, அதில் விதைகளை புரட்டி இரண்டு மணி நேரம் வைத்திருந்து நாற்றங்களில் விதைக்க வேண்டும். விதை நேர்த்தி என்பது கட்டடத்துக்கான அஸ்திவாரம் போன்றது. அதைச் சரியாகச் செய்ய வேண்டியது அவசியம்.

கத்திரி பயிர் செய்ய மே-ஜூன், அக்டோபர்-டிசம்பர், ஜனவரி-மே ஆகிய மாதங்களும் வெண்டை பயிர் செய்ய பிப்ரவரி-ஏப்ரல், ஜூன்-ஆகஸ்ட் ஆகியவை உகந்த மாதங்களாகும்.

கத்திரி, வெண்டை செடிக்கு காய்த் துளைப்பான், சிலந்தி பேன், சிவப்பு சிலந்தி பேன், இலைப்புள்ளி நோய், மஞ்சள் நரம்பு நோய் மற்றும் சாம்பல் ஆகிய நோய் தாக்கும். இவற்றைக் கட்டுப்படுத்த புரோபினோபாஸ், குயினால்பாஸ், பெவிஸ்டின் ஆகிய பூச்சிக்கொல்லி மருந்துகளை பயன் படுத்த வேண்டும்.

வெண்டை பயிரிட்ட 90 முதல் 100 நாட்களிலும், கத்தரி பயிரிட்ட 50 முதல் 120 நாட்களிலும் அறுவடை செய்யலாம். வெண்டை ஒரு ஹெக்டருக்கு 2530 டன்னும், கத்திரி ஒரு ஹெக்டருக்கு 5060 டன்னும் மகசூல் கிடைக்கும்.

மேலும் தங்களுடைய விதை தரமானதா என்பதை அறிய பரமக்குடி ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் இயங்கி வரும் விதை பரிசோதனை நிலையத்தில் விதைகளை கொடுத்து விதையின் தரத்தை அறிந்து பின் பயிரிடுவதால் மகசூல் இழப்பை தவிர்க்கலாம் என்று விதை பரிசோதனை அலுவலர் சி.சிவகாமி மற்றும் வேளாண்மை அலுவலர்கள் முருகேஸ்வரி மற்றும் வீர பாண்டியன் கேட்டுக் கொண்டனர்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN
JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்

சிறப்புச்சலுகை



கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# கற்றாழை மற்றும் நெல்லிக்காய் சாறு மனித ஆரோக்கியத்தில் ஏற்படுத்தும் தாக்கம் – ஒரு பார்வை



இயற்கை மருத்துவம் மற்றும் ஆரோக்கிய உணவுகளில், கற்றாழை (Aloe vera) மற்றும் நெல்லிக்காய் (Amla) ஆகிய இரண்டு மூலிகைகள் மிகவும் முக்கியமான இடத்தைப் பெற்று உள்ளன. இவை இரண்டும் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக பாரம்பரிய மருத்துவ முறைகளில் (சித்தம், ஆயுர்வேதம், யூனானி) பயன்பட்டு வருகின்றன. இன்றைய காலகட்டத்திலும் இவை ஆரோக்கியத்தை பேணு வதிலும், நோய்களைத் தடுக்கவும், உடல் சக்தியை வளர்த்துக் கொள்ளவும் பெரும் பங்காற்றுகின்றன.

## 1. கற்றாழை (Aloe vera)

கற்றாழை என்பது ஒரு சக்கை நிறைந்த மூலிகை தாவரம். இதில் 75க்கும் மேற்பட்ட உயிரியல் செயற்பாட்டு பொருட்கள் (bioactive compounds) உள்ளன. இதன் சாறு உடல் குளிர்ச்சி, செரிமானம் மற்றும் தோல் பராமரிப்பில் முக்கிய பங்கு வகிக்கிறது.

## 2. நெல்லிக்காய் (Amla)

நெல்லிக்காய் வைட்டமின் சி மிகுந்த தாவரமாகும். மேலும் இதுவொரு சக்தி வாய்ந்த ஆன்டி ஆக்சிடன்ட்டாகும். இதனால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது மற்றும் உடலின் ஒட்டுமொத்த ஆரோக்கியம் மேம்படுகிறது.

### ஊட்டச்சத்து அமைப்பு

கற்றாழை சாறு

- வைட்டமின் ஏ, சி, இ, பி12
- கால்சியம், சோடியம், மக்னீசியம்

- அமினோ அமிலங்கள் மற்றும் என்சைம்கள்

**நெல்லிக்காய் சாறு**

- வைட்டமின் சி அதிக அளவில்
- இரும்பு, பாஸ்பரஸ், கால்சியம்
- பாலிபீனால்கள் மற்றும் பிளேவனாய்ட்கள்

**கற்றாழையின் ஆரோக்கிய நன்மைகள்**

- **செரிமானத்திற்கு உதவுகிறது :** குடல் இயக்கத்தை ஒழுங்கு படுத்துகிறது, மலச்சிக்கலைத் தடுக்கிறது.
- **தோல் ஆரோக்கியம் :** புண்கள், கரும்புள்ளி, முகப்பரு போன்ற தோல் பிரச்சினைகளுக்கு நிவாரணம் தருகிறது.
- **நோய் எதிர்ப்பு சக்தி :** ஆன்டிஆக்சிடன்ட்கள் உடல் நச்சுக் களை நீக்க உதவுகிறது.
- **சர்க்கரை நோய்க்கு :** கற்றாழை இரத்த சர்க்கரை அளவை கட்டுப்படுத்துகிறது.
- **காயம் ஆற்றல் :** காயங்களை விரைவாக ஆற்றும் இயற்கை மருந்தாக பயன்படுகிறது.

**நெல்லிக்காய் சாறின் ஆரோக்கிய நன்மைகள்**

- **நோய் எதிர்ப்பு திறன் :** அதிகமான வைட்டமின் சி உடலின் பாதுகாப்புத் திறனை அதிகரிக்கிறது.
- **இதய ஆரோக்கியம் :** இரத்த அழுத்தம் மற்றும் கொழுப்பு அளவை கட்டுப்படுத்துகிறது.
- **மூளை செயல்பாடு :** நெல்லிக்காய் நினைவாற்றலை மேம் படுத்துகிறது.
- **முடி மற்றும் தோல் :** முடி உதிர்தல் குறைகிறது, தலையசை பராமரிப்பு மேம்படுகிறது.
- **அழற்சி எதிர்ப்பு :** உடலில் உள்ள அழற்சியை குறைக்க உதவுகிறது.

**கற்றாழை மற்றும் நெல்லிக்காய் சேர்க்கை சாறின் சிறப்புகள்**

- இரண்டும் சேர்ந்து உட்கொள்ளும்போது உடலுக்கு இரட்டிப்பு நன்மைகள் கிடைக்கும் :
- உடல் சுத்தம் மற்றும் நச்சு நீக்கம்

- சக்தி மற்றும் நோய் எதிர்ப்பு திறன் மேம்பாடு
- செரிமானம் மற்றும் இரத்த சுழற்சி ஒழுங்குபடுத்தல்
- தோல் காந்தம் மற்றும் முடி வலிமை அதிகரித்தல்

**மருத்துவ பயன்பாடுகள்**



- சித்த மருத்துவம் மற்றும் ஆயுர்வேதம் இரண்டிலும் இவை பல நோய்களுக்கு மருந்தாக பயன்படுகின்றன :
- **கற்றாழை** – வயிற்று புண், தோல் நோய், மலம் கடினம்.
- **நெல்லிக்காய்** – காய்ச்சல், இரத்த சோகை, கண் ஆரோக்கியம், சிறுநீரக பிரச்சினைகள்.

**பொருளாதார மற்றும் சமூக தாக்கம்**

இன்றைய காலத்தில் கற்றாழை மற்றும் நெல்லிக்காய் உற்பத்தி சிறு தொழில்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கி உள்ளது. சாறு, ஜாம், ஹெர்பல் டிரிங்க், சாம்பு, கிரீம் போன்ற பல மதிப்பூட்டிய பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இதனால் கிராமப்புற மக்களுக்கு வருமானம் மற்றும் வேலைவாய்ப்பு உருவாகின்றது.

**சவால்கள் மற்றும் எதிர்கால வாய்ப்புகள்**

- சரியான சாறு எடுக்கும் தொழில்நுட்பம் பற்றிய குறைபாடு.
- போலியான தயாரிப்புகள் சந்தையில் அதிகம்.
- சேமிப்பு மற்றும் காப்பாற்றும் பிரச்சினைகள்.
- ஹெர்பல் பொருட்களின் உலகளாவிய தேவை அதிகரித்து வருகிறது.
- இயற்கை மருந்துகள் மற்றும் ஆரோக்கிய பானங்கள் பிரபலமடைந்துள்ளன.
- அரசு மற்றும் தனியார் துறைகள் மூலம் சிறு அளவிலான உற்பத்தி ஊக்குவிக்கப்படுகிறது.

கற்றாழை மற்றும் நெல்லிக்காய் சாறுகள் இயற்கையின் பரிசுகளாகும். இவை உடல் நலத்தை மேம்படுத்தி, நோய்களைத் தடுக்க உதவுகின்றன. இரண்டையும் இணைத்து தினசரி உணவில் சேர்த்துக் கொள்வது ஆரோக்கியமான வாழ்க்கையை உருவாக்கும். இயற்கை மருத்துவத்தின் முக்கிய கூறுகளாகவும், பொருளாதார வளர்ச்சிக்கும் இவை பெரிய பங்களிப்பு வழங்குகின்றன.

தகவல் : *வெங்கடேஷ் ம, நிவேதா ஆ.ல. உதவிப் பேராசிரியர்கள் (தாவர இனப்பெருக்கம் மற்றும் மரபியல்), ஸ்ரீதேவி ச, நான்காமாண்டு மாணவி, நாளந்தா வேளாண்மைக் கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு.*



# விதையின் ஈரப்பதம் அறிந்து விதைகளை சேமிக்க வேளாண்மை அலுவலர் வேண்டுகோள்

விழுப்புரம், மார்ச் 25

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் கவனத்தில் கொள்ளவேண்டியவை குறித்து விழுப்புரம் விதைப் பரிசோதனை நிலைய வேளாண்மை அலவலர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

விதைகளின் தரம், பயிர் விளைச்சல் மற்றும் பயிர் ஆரோக்கியத்தினை தீர்மானிக்கிறது. பயிர் உற்பத்தியில் ஏற்படும் அபாயங்களை குறைக்கிறது.

பயிர் நடவு செய்வதற்கு முன் விதைகளின் தரம் எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொள்ளவும், தரமற்ற விதைகளை விதைப்பதால் ஏற்படும் நேரம் மற்றும் பண விரயங்களை தடுப்பதில் விதைப்பரிசோதனை முக்கிய பங்காற்றுகிறது. விதைகளின் முளைப்புத்திறனை அறிந்து கொள்வதன் மூலம் தேவையான மற்றும் சரியான விதை அளவை நிர்ணயம் செய்து, கூடுதல் செலவை குறைக்க உதவுகிறது. நோய் மற்றும் பூச்சி தாக்குதலற்ற விதைகளை கண்டறிந்து அதன் மூலம் பின்னாளில் ஏற்படும் நஷ்டங்களையும் கால விரயத்தினையும் தவிர்க்க உதவுகிறது.

நல்ல தரமான விதைகளை அடுத்த பருவத்திற்கு நாம் சேமித்து பயன்படுத்த திட்டமிட்டால் சேமிப்பதற்கு முன், விதையின் ஈரப்பதத்தினை கண்டறிந்து பூச்சிநோய் தாக்காத அளவிற்கும், நீண்டநாள் விதை உயிருடன் இருக்கவும் உகந்த ஈரப்பதத்தில் சேமிக்கவும் விதைப்பரிசோதனை முக்கிய பங்காற்றுகிறது.



எனவே ஈரப்பத அளவு : நெல் 13%, உளுந்து 9%, சிறுதானியங்கள், மக்காச்சோளம் 12%, எண்ணெய் வித்துக்கள் 9%, பருத்தி 10% இருக்க வேண்டும்.

விழுப்புரம் மற்றும் கள்ளக்குறிச்சி மாவட்ட விவசாயிகள் தங்களிடம் உள்ள விதைகளை பரிசோதனை செய்ய விதை மாதிரி ஒன்றுக்கு ரூ.80/- ஆய்வுக் கட்டணமாக செலுத்தி விதையின் தரம் அறிந்து விதைக்கவும், அறுவடை செய்த விதையினை அடுத்த விதைப்புக்கு சேமிக்கவும்,

விதையின் ஈரப்பதம் அறிந்து கொண்டு, விதைகள் பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாகாமல் சேமிக்கவும் விழுப்புரம் விதைப்பரிசோதனை நிலைய மூத்த வேளாண்மை அலுவலர் ஜெ.சோபனா கேட்டுக்கொள்கிறார்.

# இறவை பட்டமாக வெயிலை தாங்கி வளரக்கூடிய எள் விதைப்பு

அரியலூர், மார்ச் 25

அரியலூர் மாவட்டம், தா.பழூர் சுற்று வட்டார பகுதிகளில் சம்பா சாகுபடி நடவு செய்யப்பட்டு இருந்த நிலையில் அறுவடை பணி முடிவடைந்தது. தாமதமாக அறுவடை செய்யப்பட்ட நெல் வயல்களில் எந்த சாகுபடியும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டது. இந்நிலையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு பெய்த மழை காரணமாக நிலத்தில் ஈரத்தன்மை இருந்த காரணத்தால் எள் விதைக்கும் பணியில் பலர் ஈடுபட்டு வருகின்றனர்.

குறைந்த வயதில் அதிக நீர்த் தேவையின்றி, குறைந்த சாகுபடி செலவில் அதிக லாபம் ஈட்டக்கூடிய பயிர் எள் ஆகும். ஒரு பயிர் சாகுபடி செய்த நிலத்தில் மகசூல் எடுத்த பிறகு, மீண்டும் அதே பயிரை சாகுபடி செய்தால் நிலத்தினுடைய வளம் மற்றும் மகசூல் குறைய வாய்ப்புள்ளது. ஒரு பயிர் சாகுபடி செய்த பின் அடுத்த தாக, மாற்றுப் பயிர்களை விளைவித்தால், முந்தையப் பயிர் களின் கழிவுகள் எருவாகப் பயன்படும். அதோடு, முந்தையப் பயிர்களின் நோய்களும் எளிதில் தாக்காது. ஆமணக்கு, நிலக் கடலை, சூரியகாந்தி என ஏகப்பட்ட எண்ணெய் வித்துப் பயிர்கள் இருந்தாலும், அதிகப் பராமரிப்பு இல்லாமல் குறைந்த செலவிலேயே நல்ல வருவாய் தருவது எள் சாகுபடிதான்.

எள் எண்ணெய் வித்துக்களில் முக்கிய ஒன்றாகும். எள்ளானது எண்ணெய் வித்துப் பயிர்களின் அரசி என்றழைக்கப்படுகிறது. எள் சாகுபடி செய்வதற்கு பிப்ரவரி, மார்ச் மாத இறவை பட்டம் ஏற்றதாகும். இது தொடர் பயிருக்கும், கலப்பு பயிருக்கும் மற்றும் தனிப்பயிருக்கும் ஏற்றதாகும்.

எள்ளானது நிலத்தடியில் எஞ்சியுள்ள ஈரத்தன்மையை பயன்படுத்தி வறட்சியினைத் தாங்கி வளரக் கூடிய தன்மை உடையதாகும்.

தற்போது தண்ணீர் இல்லாத நிலையில் நிலத்தில் உள்ள ஈரத்தை பயன்படுத்தி எள் சாகுபடி செய்து வருகின்றனர். மேலும் இரவு நேரங்களில் அதிக பனி பொழிவு உள்ள காரணத்தினால் பனி துளிகள் ஈரத்தை வைத்து எள் முளைத்து வளர்ந்து விடும். ஆகையால் வயலை புழுதி உழவு செய்து எள் விதைப்பு செய்து வருகின்றனர்.

இதனால் தண்ணீர் இன்றி, ஆள் செலவு இன்றி லாபத்தை எடுக்க கூடிய பயிரான எள் பயிரை விவசாயிகள் விதைப்பு செய்து வருகின்றனர்.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**



Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

### PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

### RITHVIK PIPES PROUDLY TRUSTED BY


LMW isha POWERGRID BHEL

**Office**
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

**Factory**
**Rithvik Pipe Company**, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# மண்ணின் கார, அமில, நிலை (PH) என்றால் என்ன?




விவசாயத்தில் மகசூலை நிர்ணயிக்க கூடியது மண்ணின் தரம் மற்றும் மண்ணின் இரசாயன சமநிலை தான் முக்கிய காரணமாகும். அதில் மண்ணின் கார, அமில நிலை ( PH ) POTENTIAL OF HYDROGEN) என்பது மண் எவ்வளவு அமிலத் தன்மை (ACIDIC) அல்லது காரத்தன்மை (ALKALINE) கொண்டுள்ளது என்பது குறிக்கும் அளவீடு ஆகும். இது 0 முதல் 14 வரையிலான அளவுகோலால் கணக்கிடப்படுகிறது.

மண்ணின் வளம் (PH), மண்ணில் நாம் இடும் நைட்டிஜன் (N), பாஸ்பரஸ் (P), பொட்டாசியம் (K) போன்ற பேரூட்ட சத்துகள் பயிர்களுக்கு கிடைப்பதை இந்த (PH) அளவே தீர்மானிக்கிறது. பொதுவாக மண்ணின் தன்மை தரம் இரசாயன சமநிலை தான் நிர்ணயிக்கும். விளைச்சலுக்கு மண் தான் அடிப்படை. விவசாயத்தில் உரமிடுதல் என்பது இரண்டாம் பட்சமே.

**1) அமிலநிலை ( ACIDIC SOIL) PH 6க்கு கீழ்**

இந்த நிலையில் பாஸ்பரஸ் சத்து மண்ணில் தங்கி கிட்டா நிலையில் பயிருக்கு கிடைக்காமல் மண்ணிலே தங்கிவிடும். இவைகளை பயிர்கள் எளிதாக உறிஞ்சிட முடியாது. மேலும் அலுமினிய நச்சுத்தன்மை அதிகரித்து வேர்களின் வளர்ச்சி பாதிக்கும். அமில மண் நிலங்களுக்கு சுண்ணாம்பு (LIME) சேர்ப்பதன் மூலம் (PH) அளவை உயர்த்தி மண்ணின் தரத்தை சரி செய்யலாம்.

**கார நிலை (ALKALINE SOIL) PH 7.5க்கு மேல்**

இரும்பு மாங்கனீஸ் மற்றும் துத்தநாக நுண்ணூட்ட சத்துகள் குறைபாடுகள் ஏற்பட்டு இலைகள் வெளுத்து போகும் நுண்ணூட்ட சத்து குறைபாடு ஏற்படும்.

நுண்ணூட்ட சத்து குறைபாடு ஏற்படும். காரதன்மை அதிகமுள்ள நிலங்களில் (ஜிப்சம்) கந்தகம் (SULPHUR) இட்டு சமநிலைபடுத்தலாம்.

**நடுநிலை ( NEUTRAL SOIL) PH (6.5-7.5)**

பெரும்பாலான பயிர்கள் PH 6.5-7.5 வரையிலான அளவீடு நடுநிலையாகும். அனைத்து பயிர்களும் வளமாக வளரும். நல்ல விளைச்சல் பெற மண்ணை என்ன செய்ய வேண்டும்.

மண் மாதிரி (SOIL SAMPLE) எடுத்து மண்ணை பரிசோதனை செய்து மண்ணின் வளத்திற்கேறப உரமிட வேண்டும்.

PH அளவை சமன்படுத்துவதால் உரங்களின் செயல் திறன் (EFFICIENCY) 100% உறுதி செய்கிறது. மண்ணை பரிசோதனை செய்வதால் தேவையற்ற உரங்களை இட்டு காசை கரியாக்காமலும் மண்ணை மலடாக்காமலும் பாது காக்க மண்பரி சோதனை செய்து பரிந்துரைக்கேற்ப உரமிடு வோம்.

மண்ணை பரிசோதனை செய்ய இதுவே தக்க தருணம் கோடை உழவுக்கு முன் மண்வளத்தை அறிந்து கொள்ளுங்கள்.

மண்பரிசோதனை செய்ய மிக மிக குறைந்த கட்டணம் தான் வெறும் 30 ரூபாய் மட்டுமே. அருகேயுள்ள மண்பரிசோதனை நிலையம் / நடமாடும் மண்பரிசோதனை நிலையத்தை நாடவும்.

மண்ணின் வளமே மக்களின் வளமாகும். என்ன மண்பரிசோதனை செய்ய நீங்க ரெடியா?

தகவல் : அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.



# நவீன வேளாண்மையில்

# தென்னையில் வேர் வாடல் நோய் கட்டுப்பாடு

● இந்நோய் பிற மரங்களுக்கு பரவுதலை தவிர்க்கும் வகையில் வருடத்திற்கு 10 காய்களுக்கும் குறைவாக அல்லது காய்கள் இல்லாமல் மிக அதிகளவு நோயுற்ற மரங்களை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும்.

● நோய் தாங்கும் திறன் கொண்டு இரகங்களான கல்பரக்ஷா மற்றும் கல்பஶ்ரீ இரகங்களைப் பயன்படுத்தலாம்.

● நன்றாக வடிகால் வசதி செய்ய வேண்டும்.

● வட்டப்பாத்திகளில் தென்னை மட்டைகளைக் கொண்டு மூடாக்கு அமைக்க வேண்டும்.

● தோப்பு முழுவதும் நீரைப் பரவவிட்டு பாய்ச்சும் முறையைத் தவிர்க்க வேண்டும்.

● பசுந்தாள் உரங்களான தட்டைப்பயிர். சணப்பை, கலப்ப கோணியம் மற்றும் தக்கைப்பூண்டு ஆகியவற்றை வட்டப்பாத்தி அல்லது தோப்பு பகுதி முழுவதும் வளர்த்து பூக்கும் முன்னரே மடக்கி உழுதுவிட வேண்டும்.

● தென்னையின் வயதுக்கேற்ப ஊடுபயிர்களான வாழை, மிளகு, கோகோ, மஞ்சள், இஞ்சி, கிழங்கு வகைகள், ஜாதிக்காய் மற்றும் மரவள்ளி போன்ற பயிர்களை பயிரிட்டு வருமானத்தை பெருக்கலாம்.

● உர மேலாண்மையில் ஒரு மரத்திற்கு பரிந்துரைக்கப்பட்ட அளவுகளான தொழு உரம் – 50 கிலோ, வேப்பம் புண்ணாக்கு – 5 கிலோ, யூரியா – 1.3 கிலோ சூப்பர் பாஸ்பேட் – 2 கிலோ, பொட்டாஷ் – 3.5 கிலோ, மெக்னீசியம் சல்பேட் – 1 கிலோ ஆகிய வற்றை வருடத்திற்கு இருமுறை பிரித்து இட வேண்டும்.

● உயிர் எதிர்க்கொல்லிகளான, பேசில்லஸ் சப்டிலிஸ் – 100 கிராம் டிரைக்கோடெர்மா அஸ்பரல்ல் – 100 கிராம் மற்றும் உயிர் உரங்களான அசோஸ்பைரில்லம் – 100 கிராம், பாஸ்போ பாக்டீரியா – 100 கிராம் மற்றும் வேர் உட்பூசணம் – 50 கிராம் ஆகியவற்றை தொழு உரத்துடன் கலந்து வருடத்திற்கு இரு முறை பிரித்து ஒரு மரத்திற்கு அரை வட்டப்பாத்தியில் இட வேண்டும்.

● தென்னை டானிக் 40 மில்லியை 160 மில்லி தண்ணீருடன் கலந்து ஒரு மரத்திற்கு ஆண்டிற்கு இருமுறை வேரில்கட்ட வேண்டும். இது தென்னையின் நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் காய் பிடிப்பை மேம்படுத்தி மகசூல் பெருக்கத்திற்கு வழிவகுக்கிறது.

● நோய் காரணியை பரப்பும் சாறு உறிஞ்சும் பூச்சிகளான, கண்ணாடி இறக்கைப் பூச்சி மற்றும் தத்துப் பூச்சிகளைக் கட்டுப்படுத்த வேப்பம் புண்ணாக்கு துகள் 250 கிராம் + 200 கிராம் மணல் அல்லது பிப்ரோனில் 0.3 ஜி யை மணலுடன் 1:1 என்ற விகிதத்தில் கலந்து குருத்தின் அடிப்பகுதியில் இட வேண்டும்.




● ஒரு மரத்திற்கு 2 லிட்டர் பெருக்கம் செய்யப்பட வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கோகோகான் உடன் 8 லிட்டர் தண்ணீர் கலந்து, வட்டப்பாத்தியில் வேர் பகுதி நன்கு நனையுமாறு ஊற்ற வேண்டும்.

இம்முறையை நோயின் தீவிரத்தைப் பொறுத்து இரண்டு (அ) மூன்று மாதங்களுக்கு ஒருமுறை செய்ய வேண்டும்.

**வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கோகோகான் நுண்ணுயிரி கலவை பெருக்கும் முறை :**

**தேவையான பொருட்கள்**

1. கோகோகான் தாய்க்கலவை – 5 லிட்டர்
2. நாட்டுச்சர்க்கரை – 10 கிலோ
3. தயிர் – 5 லிட்டர்
4. தண்ணீர் – 150 லிட்டர்
5. உப்பு (சோடியம் குளோரைடு) – 500 கிராம்

பயன்கள்

1. இது ஒரு சிக்கனமான முறை
2. இது பயிர்களின் வளர்ச்சி மற்றும் மகசூலை அதிகரிக்கச் செய்கிறது.
3. இது பயிர்களின் நோய் எதிர்ப்பு திறனை அதிகரிக்கச் செய்கிறது.
4. இது மண்ணிலுள்ள கனிம பொருட்களைப் பயன்படுத்த பல மடங்காக பெருகி செடிகளுக்கு பாதுகாப்பை நீண்ட காலத்திற்கு தருகிறது.
5. இது இதர உயரினங்களுக்கும், தோட்டத்தில் உள்ள மண் புழுக்களுக்கும் தீமை விளைவிப்பதில்லை.

இத்தகைய ஒருங்கிணைந்த நோய் மேலாண்மை முறைகளை தென்னையில் அனைத்து விவசாயப் பெருமக்கள் பின் பற்றினால் மண்ணின் வளம் பாதுக்காப்படுவதுடன் மட்டு மல்லாமல் நோய் எதிர்ப்பு சக்தியம் அதிகரிப்பதால் தென்னை மரங்களை கேரளா வேர் வாடல் நோயிலிருந்து பாதுகாக்கலாம்.

தகவல் : *வி.யுவராஜ் தட்சிணாமூர்த்தி, வேளாண்மைப் பொறியாளர், சக்தி பொறியாளர் கல்லூரி, கோவை.*

# வெயிலின் தாக்கம் அதிகரிப்பால் நார் உலர வைக்கும் பணி தீவிரம்

திருப்பூர், மார்ச் 25

திருப்பூர் மாவட்டம், பொள்ளாச்சி பகுதியில் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளதால், கிராமங்களில் உள்ள களங்களில் நார் உலர வைக்கும் பணி தீவிரமடைந்துள்ளது. பெரும்பாலான இடங்களில் ஆட்கள் பற்றாக்குறையால் டிராக்டர் இயந்திரம் கொண்டு உலர வைக்கும் பணிகள் தீவிரமாக நடக்கிறது. கோவை மாவட்டம், பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதிகளில் தென்னை விவசாயமே அதிகளவில் உள்ளது.

சுற்றுவட்டார கிராம பகுதிகளில் 350க்கும் மேற்பட்ட நார் தொழிற்சாலைகளில் நார் உலர வைக்கும் பணி நடக்கிறது. மழை காலங்களில் நார் உலர வைக்கும் பணி மந்தமாக இருக்கும், பின் வெயிலின் தாக்கம் அதிகம் இருக்கும் போது நார் உலர வைத்து அதன் உற்பத்தியை அதிகமாக்குகின்றனர். இதில் கடந்த ஆண்டில் ஜுலை முதல் தொடர்ந்து சில மாதங்களாக தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை அடுத்தடுத்து பொழிந்தது. இதனால் அச்சமயத்தில் நார் உலர வைக்க முடியாமல் உற்பத்தியாளர்கள் தவித்தனர்.

மேலும் கடந்த ஜனவரி மாதம் துவக்கம் வரை பனிப்பொழிவு மற்றும் அவ்வப்போது சாரல் மழைப்பொழிவு இருந்ததால் நார் உலர வைக்கும் பணி மந்தமாக இருந்தது. இந்நிலையில் கடந்த இரண்டு மாதமாக பொள்ளாச்சி சுற்றுவட்டார பகுதிகளில் மழை பொழிவு இல்லாமல் வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. காலை நேரத்தில் குளிர்ந்த காற்று வீசினாலும், பகல் நேரத்தில் வெயிலின் தாக்கம் தொடர்ந்திருப்பதால் களங்களில் நார் உலரவைக்கும் பணி தீவிரமாக நடக்கிறது. இதில் பெரும்பாலான களங்களில், நார் உலர வைக்கும் பணியில் வெளி மாவட்ட மற்றும் வெளிமாநில தொழிலாளர்களே ஈடுபடுகின்றனர்.

இருப்பினும் அந்த தொழிலாளர்கள் எண்ணிக்கை போதியளவு இல்லாமல் இருப்பதால், தொழிற்சாலைகளில் மட்டையிலிருந்து அதிகபடியான நார்களை பிரித்தெடுத்து அதனை டிராக்டரில் தனி இயந்திரம் பொறுத்தி விரைந்து உலர வைக்கம் பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். இதனால் உற்பத்தி அதிகரித்து வெளியிடங்களுக்கு அதிக அளவு அனுப்ப ஏதுவாக இருக்கும்.

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# ஆகாயத் தாமரை கம்போஸ்ட் மூலம் பசுமை விவசாயத்திற்கு ஒரு புதிய வழி

நீர்நிலைகளில் வேகமாகப் பரவி வளரக்கூடிய ஆகாயத் தாமரை (Water hyacinth) பொதுவாக ஒரு தொல்லை தரும் நீர்க் களையாகக் கருதப்படுகிறது. ஆனால், சரியான முறையில் பயன்படுத்தினால், இது விவசாயத்திற்கு மிகச் சிறந்த உயிரி உரமாக (Organic manure) மாறுகிறது. குறிப்பாக, ஆகாயத் தாமரையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் கம்போஸ்ட், மண் வளத்தை உயர்த்துவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.

**ஆகாயத் தாமரை – பிரச்சனையா? அல்லது வாய்ப்பா?**

**ஆகாயத் தாமரை நீர் நிலைகளில் அதிகமாகப் பரவுவதால் :**

● நீரில் ஆக்சிஜன் அளவு குறையும்

● நீர்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படும்

● நீர்ப்பாசன ஓட்டம் தடைப்படும்

ஆனால், இதையே கம்போஸ்ட் தயாரிப்பில் பயன்படுத்தினால் :

ஒரு பெரிய சுற்றுச்சூழல் பிரச்சனை – ஒரு பயனுள்ள வளமாக மாறுகிறது.

**ஆகாயத் தாமரை கம்போஸ்ட் தயாரிப்பு**

**1. சேகரிப்பு :** நீர்நிலைகளில் இருந்து ஆகாயத் தாமரை அகற்றப்படுகிறது

**2. காய்வித்தல் :** சில நாட்கள் வெயிலில் காயவைத்து ஈரப்பதம் குறைக்கப்படுகிறது

**3. கம்போஸ்ட்டாக்கம் :** சிறிய துண்டுகளாக நறுக்கப்பட்டு காய்ந்த உயிரிசை அடுக்குகளாக வைத்து பின்னர் குழி அல்லது மேடு முறையில் அடுக்கி வைக்கப்படுகிறது. இடையே மண் சேர்த்து ஈரப்பதம் வைத்திருக்க வேண்டும். பின் சிதைவுக்குட் படுத்தப்படுகிறது.

**4. ஆகாயதாமரை சத்து சேர்த்தல் :** பாஸ்பரஸ் போன்ற சத்துக்கள் சேர்த்து மேலும் செழுமைப்படுத்தலாம். ஆகாயத் தாமரை கொண்டு கம்போஸ்ட் தயாரிப்பது மிகவும் எளிது.

**பாஸ்போ-கம்போஸ்ட் எப்படி?**

சாதாரண கம்போஸ்ட் தயாரான பிறகு அதில் Single Super Phosphate (SSP) சேர்க்கப்படுகிறது. இதனால் கம்போஸ்ட் பாஸ்பரஸ் சத்து அதிகரிக்கும். இதுவே பாஸ்பரஸ் செறிவூட்டப் பட்ட கம்போஸ்ட் (Phospho-compost) ஆகும். இதனால் பாஸ் பரஸ் செறிவூட்டப்பட்ட கம்போஸ்ட் கிடைக்கும்.

**ஏன் இது முக்கியம்?**

பாஸ்பரஸ் உரங்கள் விலை உயர்ந்தவை. எல்லா விவசாயி களுக்கும் எளிதாக கிடைக்காது. ஆகாயத் தாமரை போன்ற களைகளை பயன்படுத்தி குறைந்த செலவில் நல்ல உரம் தயாரிக்கலாம்.

**சத்துக்கள் மற்றும் மண் மேம்பாடு**

**ஆகாயத் தாமரை கம்போஸ்ட் :**

- நைட்ரஜன் (N), பாஸ்பரஸ் (P), பொட்டாசியம் (K) போன்ற சத்துகளை வழங்குகிறது
- மண்ணில் உள்ள நுண்ணுயிர் செயல்பாட்டை அதிகரிக்கிறது
- மண்ணின் உட்கட்டமைப்பு (Soil structure) மேம்பட உதவுகிறது

**விவசாயத்தில் பயன்பாடுகள்**

**ஆகாயத் தாமரை கம்போஸ்ட் பயன்படுத்துவதால் :**

- விதை முளைச்சல் மற்றும் வேர் வளர்ச்சி மேம்படும்
- பயிர்களின் வளர்ச்சி சீராக இருக்கும்
- விளைச்சல் அதிகரிக்கும்
- இரசாயன உரங்களின் பயன்பாடு குறையும்
- சுற்றுச்சூழல் நட்பு விவசாயம் சாத்தியம்

**விவசாயிகளுக்கு நன்மைகள்**

- குறைந்த செலவில் தயாரிக்கலாம்
- உள்ளூர் வளங்களை பயன்படுத்தலாம்
- நீர்நிலைகள் சுத்தமாகும்

- நீடித்த (Sustainable) விவசாயத்திற்கு உதவும்

முடிவுரை

ஆகாயத் தாமரை போன்ற நீர்க் களைகளை, பயனுள்ள உயிரி உரமாக மாற்றுவது என்பது இன்றைய காலத்தின் முக்கிய தேவையாகும். இது மண் வளத்தையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பையும் ஒரே நேரத்தில் மேம்படுத்தும் சிறந்த முறை யாகும். ஆகாயத் தாமரை போன்ற களைகளை வீணாக்காமல், அவற்றை பயனுள்ள பாஸ்போ–கம்போஸ்ட்டாக மாற்றுவது விவசாயத்திற்கு ஒரு சிறந்த தீர்வு. இது செலவு குறைப்பு + மண் வளம் + சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்ற மூன்றையும் ஒரே நேரத்தில் தருகிறது. விவசாயிகள் இதைப் பயன்படுத்துவதன் மூலம், செலவைக் குறைத்து விளைச்சலை அதிகரிக்கலாம் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.



கட்டுரையாளர் : *விக்னேஷ்.தே, உதவி பேராசிரியர், மண் அறிவியல் மற்றும் வேளாண்மை வேதியியல், நாளாந்த வேளாண்மை கல்லூரி, திருச்சி, தமிழ்நாடு. மின்னஞ்சல் : harishvignesh143@ gmail. com.*

## மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!



# வெயில் தாக்கத்தால் தேயிலை மகசூல் குறைவு

கோயம்புத்தூர், மார்ச் 25

கோவை மாவட்டத்தின் முக்கிய மலைப்பகுதியான வால்பாறையில், தற்போது நிலவும் கடும் வெயில் காரணமாக தேயிலை மகசூல் கணிசமாக குறைந்துள்ளதாக தோட்ட நிர்வாகத்தினர் தெரிவிக்கின்றனர்.

வால்பாறை மற்றும் சுற்றியுள்ள மலைப்பகுதிகளில் சுமார் 25,000 ஏக்கர் பரப்பளவில் தேயிலை பயிரிடப்பட்டுள்ளது. இந்த பகுதிகளில் தேயிலை உற்பத்தி பெருமளவில் கால நிலையை பொறுத்தே உள்ளது.

வழக்கமாக மிதமான வெப்பநிலை மற்றும் அவ்வப்போது கிடைக்கும் மழையால், மட்டுமே தழை வளர்ச்சி சீராக இருக்கும். ஆனால், கடந்த சில வாரங்களாக நிலவும் அதிக வெப்பநிலை காரணமாக தேயிலை செடிகளின் வளர்ச்சி மந்தமடைந்துள்ளது.

புதிய இலை முளைப்பு குறைந்ததால், தினசரி மகசூல் அளவும் குறைந்துள்ளதாக கூறப்படுகிறது. தற்போது, வால்பாறை பகுதிகளில் கோடைகால மழையை அப்பகுதியினர் ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர்.

மழை கிடைத்தால், அடுத்த சில வாரங்களில் தேயிலை மகசூல் மீண்டும் அதிகரிக்கும் என நம்பிக்கை உள்ளதாக தெரிவித்தனர். தேயிலை தோட்டங்கள் பசுமையாக காணப்பட்டாலும் மகசூல் குறைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. இதனால், வால்பாறை தேயிலை தோட்டங்கள் முழுவதும் தற்போது காலநிலை மாற்றத்தை கவனித்து கொண்டு செயல்படும் நிலை நீடிக்கிறது.



# கொய்யா - ஆரோக்கியத்தின் இனிய பொக்கிஷம்

தமிழ்நாட்டில் கொய்யா சாகுபடி குறைந்த முதலீட்டில் அதிக லாபம் தரும், ஆண்டு முழுவதும் வருவாய் ஈட்டித்தரும் ஒரு சிறந்த தோட்டக்கலைத் தொழிலாகும். இது “ஏழைகளின் ஆப்பிள்” என அழைக்கப்படுகிறது. இதில் வைட்டமின் C மற்றும் நார்ச்சத்து அதிகம். வறட்சியைத் தாங்கி வளரும் தன்மையும், குறைவான பராமரிப்பும் இதற்கு முக்கிய காரணங்களாகும்.




## கொய்யாப் பழத்தின் முக்கிய ஆரோக்கிய நன்மைகள்



● **நோய் எதிர்ப்பு சக்தி :** இதில் உள்ள அதிகப்படியான வைட்டமின் சி, உடலை தொற்று நோய்களில் இருந்து பாதுகாத்து, நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்துகிறது.

● **செரிமானம் மற்றும் மலச்சிக்கல் :** கொய்யாவில் நார்ச்சத்து மிக அதிகம். இது செரிமானத்தை மேம்படுத்தி மலச்சிக்கல் பிரச்சனையை போக்குகிறது.

● **இரத்த சர்க்கரை மேலாண்மை :** குறைந்த கிளை செமிக் குறியீட்டைக் கொண்டுள்ளதால், இது இரத்த சர்க்கரை அளவை அதிகரிக்காமல் கட்டுக்குள் வைக்க உதவுகிறது. நீரிழிவு நோயாளிகளுக்கு சிறந்தது.

● **இதய ஆரோக்கியம் :** கொய்யாவில் உள்ள பொட்டாசியம் மற்றும் நார்ச்சத்து இரத்த அழுத்தத்தைக் குறைத்து இதய நோய்கள் வரும் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.

● **தோல் மற்றும் கண் ஆரோக்கியம் :** வைட்டமின் ஏ மற்றும் ஆண்டி ஆக்ஸிடன்ட்கள் கண் பார்வையை மேம்படுத்தி சருமத்தை இளமையாகவும் பொலிவாகவும் வைக்கிறது.

● **எடை இழப்பு :** குறைவான கலோரி மற்றும் அதிகமான நார்ச்சத்து இருப்பதால், உடல் எடையை குறைக்க நினைப்பவர்களுக்கு இது ஒரு சிறந்த பழம்.

● பல்வலி நிவாரணம் : கொய்யா இலைகளில் பாக்டீரியா எதிர்ப்பு பண்புகள் உள்ளன. இது பற்களில் உள்ள சொத்தை மற்றும் ஈறு பிரச்சனைகளை போக்க உதவுகிறது.

## தமிழ்நாட்டில் கொய்யா சாகுபடி – முக்கிய தகவல்கள்

● **மண் மற்றும் காலநிலை :** வெப்ப மண்டல பயிரான கொய்யா, வறட்சியைத் தாங்கி வளரக் கூடியது. வடிகால் வசதியுள்ள செம்மண் மற்றும் வண்டல் மண் சிறந்தது.

● **சிறந்த ரகங்கள்**

▸▸ **லக்னோ – 49 (சர்தார்) :** அதிக மகசூல், பெரிய பழங்கள், இனிப்பு சுவை, நீண்ட ஆயுள்.

▸▸ **அலகாபாத் சஃபேதா :** சதைப்பற்று மிக்கது.

▸▸ **தைவான் பிங்க் / ரெட் :** சந்தையில் நல்ல விலை கிடைக்கிறது.

● **பயிரிடும் முறை**

▸▸ **அடர்நடவு முறை :** ஏக்கருக்கு அதிக எண்ணிக்கையில் கன்றுகளை நடுவதன் மூலம் அதிக மகசூல் பெறலாம்.

▸▸ பரிந்துரைக்கப்படும் இடைவெளி : 5 x 5 மீட்டர் அல்லது 6 x 6 மீட்டர். அடர் நடவுக்கு 3 x 2 மீட்டர் பயன்படுத்தப்படுகிறது.

● **நீர்ப்பாசனம் மற்றும் உரம் :** சொட்டு நீர் பாசனம் (Drip Irrigation) சிறந்த நீர் வழங்கல் முறையாகும், இது உரம் மற்றும் நீர் பயன்பாட்டை மேம்படுத்துகிறது. மார்ச் மற்றும் அக்டோபர் மாதங்களில் தொழுஉரம் (ஒரு மரத்திற்கு 50 கிலோ) மற்றும் தழை, மணி, சாம்பல் சத்துக்களை இடவேண்டும்.

● **கவாத்து (Pruning) :** மரத்தின் உயரம் மற்றும் கிளைகளைக் கட்டுப்படுத்துவதன் மூலம் சூரிய ஒளிபட்டு, பழத்தின் தரம் மற்றும் அளவு கூடுகிறது. வளைத்துக் கட்டுதல் (Bending) மூலம் அதிக காய்ப்பு வரும்.

● **சந்தை மற்றும் லாபம் :** தமிழ்நாட்டில் குறிப்பாக திண்டுக்கல், விழுப்புரம், தஞ்சாவூர் மாவட்டங்களில் கொய்யா சாகுபடி பிரபலமாக உள்ளது.

சரியான சந்தைப்படுத்துதல் மூலம் ஆண்டு முழுவதும் நல்ல வருமானம் பெறலாம்.

**கொய்யாப் பழத்தில் உள்ள முக்கிய ஊட்டச்சத்துக்கள் (100 கிராமில்) :**

● **வைட்டமின் C :** மிக அதிக அளவில் உள்ளது (சுமார் 228 mg), இது நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கிறது.

● **நார்ச்சத்து :** 5.4 - 9 கிராம் வரை உள்ளது. இது செரிமானத்திற்கும் மலச்சிக்கலைத் தடுக்கவும் உதவுகிறது.

● **பொட்டாசியம் :** 417 mg உள்ளது. இது இரத்த அழுத்தத்தைக் கட்டுப்படுத்தி இதய ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.

● **வைட்டமின் A :** கண்பார்வைக்கு நல்லது.

● **ஆக்ஸிஜனேற்றிகள் :** உடலை சேதப்படுத்தும் ஃப்ரீ ரேடிக்கல்களை எதிர்த்துப் போராடுகிறது.

● **குறைந்த கலோரிகள் :** 100 கிராமில் சுமார் 68-112 கலோரிகள் மட்டுமே உள்ளன.

● **ஃபோலிக் அமிலம் :** கர்ப்பிணிகளுக்குத் தேவையானது.

**முடிவுரை**

கொய்யாப்பழம் மலிவானது, எங்கும் கிடைப்பது, சுவையானது, அதைவிட முக்கியமாக ஆரோக்கியத்துக்கு அபார நன்மை தருவது. தினமும் ஒரு கொய்யா சாப்பிடுவது போன்ற சிறிய பழக்கம் கூட நீண்ட காலத்தில் உடலை வலுவாக்கி, மருத்துவச் செலவை குறைக்கும்.

கட்டுரை ஆசிரியர் : *க.காவியா, பா.கார்த்திகா மற்றும் மொ.ஆபித், இளங்கலை வேளாண் மாணவர்கள், எஸ்.ஆர்.எஸ். வேளாண்மை மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, திண்டுக்கல்.*

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம்
  நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள்
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள்
  தரத்திற்க்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள்
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன்
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS
LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741